ஆகஸ்ட் மாதம் 10-ம் தேதி பகல் 12-மணிக்கு சட்டசபை விசேஷக்கூட்டம் மந்திரிகளாக இரண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கக் கூட்டப்பட்டது. Mr. V. ஷண்முகம் செட்டியார் B. A., B. L., அவர்களும் Mr. V. பாலகிருஷ்ணன் சேர்வைகாரர் அவர்களும் அதிகப்படியான வோட்டுகளை முறையே 25-ம், 14-ம் பெற்றார்கள். தேர்தல் முடிவை எடுத்துச் சொல்லுகையில் சட்டசபைத் தலைவர் திவான் ஜனாப் கான் பஹதூர் P. கலிபுல்லா சாஹேப் அவர்கள், வெற்றி பெற்ற நபர்களுக்கு வாழ்த்துச் செய்திகூறி, அவர்கள் புதிய பதவியில் பொதுநன்மைக்கேற்க நம்பி சமஸ்தான காரியங்களைச் செய்வார்களென்று, வரவேற்பதாகவும் சொன்னார்கள். சீக்கிரத்தில் பொறுப்பாட்சியைப் பெறுவது புதிதாகத் தேர்ந்தெடுத்த மந்திரிகள் அலுவல்களைக் கவனிக்கும் விதத்திலிருக்கிறது என்று சொன்னார்கள். தவிர அவர்கள் தங்கள் புதுப்பதவியில் ஓர் பெரிய பொறுப்பை வகித்ததாக உணரவேண்டுமென்றும் எடுத்துக் காட்டினார். மற்ற அங்கத்தினர்களும், திவான் அவர்கள் கூறிய வாழ்த்துச் செய்திகளில் கலந்துகொண்டு, புதிய மந்திரிகளை வரவேற்றார்கள்.

தேர்தலில் வெற்றிபெற்ற நபர்களின் பெயர்கள் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அன்னார் பிறகு அந்த இருவரையும் மந்திரிகளாக நியமிப்பார்கள்.

* * * * *

முனிஸிபல் தலைவரைத் தேர்ந்தெடுக்க முனிஸிபல் சபையின் விசேஷக்கூட்டமொன்று ஆகஸ்டு மாதம் 11-ம் தேதி நடைபெற்றது. அத்தேர்தலுக்கு

ஸ்ரீ கோசலராம் நாயுடுகாருவும் ஸ்ரீ சிவசாமி சேர்வைகாரரும் அபேக்ஷகர்களாக நின்றார்கள். வோட் எடுத்ததில் இருவருக்கும் 9 வோட்டுகள் சரிசமமாக வந்தது. சபைத் தலைவர் சிட்டுக்குலுக்கி போட்டுவிடலாமென்று சொன்னதின்பேரில் ஸ்ரீ கோசலராம் நாயுடு தன் அபேக்ஷையை வாபஸ் பெற்றுக்கொள்வதாகச் சொன்னார். அதனால் சேர்மன் ஸ்ரீ சிவசாமி சேர்வைகாரரே தேர்ந்தெடுக்கப் பட்டாரென்று அறிவித்தார். தற்போதைய நகரசபைத் தலைவர் ஸ்ரீ ஷண்முகம் செட்டியார் தேர்தலில் வெற்றியடைந்த ஸ்ரீ சிவசாமி சேர்வைகாரருக்கு வாழ்த்துச் செய்திகள் கூறினார்கள்.

மாட்சி தங்கிய
ஸ்ரீ-பிரஹதம்பா தாஸ் ராஜா ராஜகோபாலத் தொண்டைமான் பஹதூர் அவர்கள் அன்னாரின் 25-வது வருஷ வர்த்தனையன்று விடுத்த

பிரகடனம்.

---

1. ஸ்ரீ-பிரஹதம்பாளின் அருளினால் இன்று எனக்கு 25 வயது ஆரம்பமாகிறது. இத்தருணத்தில் என்னுடைய பிரஜைகளுக்கு என்னுடைய நல்வரவையும் ஆசியையும் கூறுவதில் மிகவும் சந்தோஷிக்கிறேன்.

2. இன்று நாம் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தில் இருக்கிறோம். இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கை அங்கீகாரம் செய்யப்பட்டுவிட்டது. இன்று முதல் சரியாக ஒரு மாதத்தில் அந்த சுதந்திரம் விரைவாக அமுலுக்கு வந்துவிடும். நமது நாட்டின் சரித்திரத்திலே இது பெருமைவாய்ந்த தருணமாகும். இத்தருணத்தில் இவ்விதமான சித்தியைப்பெற காரணமாகயிருந்த இந்திய தேசியத் தலைவர்கள் எல்லோரையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக்கொள்ளுவது உசிதமான காரியமாகும்.

3. நமது புதிய அந்தஸ்துடன் புதிய பொறுப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. எல்லா வகுப்புகளைச் சேர்ந்த இந்தியர்களும் இந்த மகத்தான சந்தர்ப்பத்திற்கு உகந்தவாறு முன்வந்து கண்யமாகவும், தைரியத்துடனும், பொறுப்புடனும் அவர்களின் கடமையை நிறைவேற்றுவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. சுதந்திரம் பெறுவதற்கு நாம் செய்த முயற்சிகளில் நமக்கு உத்சாகமூட்டிய அதே லக்ஷியங்கள் எதிர்காலத்திலும் நமக்கு உத்சாகம் ஊட்டி வருமென்றும், நமது தினசரி நடவடிக்கைகளில் ஒழுங்கு முறையான சுதந்திரத்திற்கு இன்றியமையாத பரஸ்பர பொறுப்புத்தன்மையும் நல்லுணர்ச்சியுடன்

அனுதாபமும்கூடிய குணங்களை நாம் கடைப்பிடிப்போம் என்றும் நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்த என்னுடைய உணர்ச்சியானது ஒவ்வொருவருடைய மனதிலும் பிரதிபலிக்கும் என்றும் நான் உறுதிகொண்டிருக்கிறேன்.

4. இந்தியாவின் சரித்திரத்தில் முக்கியமான இந்த சந்தர்ப்பத்தை நமது சமஸ்தானத்தின் நிர்வாகத்துடன் பொது மக்களை நெருங்கி ஒத்துழைப்பதற்காக ஏற்பாடு செய்வதன்மூலம் கொண்டாட விரும்புகிறேன். சமஸ்தான மக்களுக்கும் ராஜ வம்சத்தாருக்கும் உள்ள நெருங்கிய இணைப்பு மிகவும் உறுதிவாய்ந்தது. அது காலப்போக்கினால் சிறிதும் பாதிக்கப்படாமல் நிலை பெற்றிருக்கின்றது. எக்காலத்திலும் பொது ஜன அபிப்பிராயத்துக்கு கவர்ன்மெண்டார் தகுந்த மதிப்புக்கொடுத்து வந்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தாவது பொதுஜன அபிப்பிராயம் குறிப்பிட்ட வகைகளில் உருப்பெற்றிருக்கிறது. 1902-ம் வருஷத்தில் ஒரு ஜனப்பிரதிநிதி சபை ஏற்பாடு செய்யப்பட்டது. 22-வருஷங்கள் வரையில் பொது ஜனங்களின் அக்கரைக்குரிய எல்லா விஷயங்களிலும் பொது ஜன பிரதிநிதிகளின் ஆலோசனை தாராளமாக வேண்டப்பட்டு தாராளமாகக் கிடைத்தும் வந்தது. 1924-ம்வருஷத்தில் ஒரு சட்ட நிர்மாண சபை அமைக்கப்பட்டது. அதில் 35-தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும், உத்தியோகஸ்தர்கள், உத்தியோகப்பற்று இல்லாதவர்கள் அடங்கிய 15-நியமனம் செய்யப்பட்ட அங்கத்தினர்களும் இருந்துவருகிறார்கள். சமஸ்தான விஷயங்களில் சட்ட நிர்மாண சபை குறிப்பிடத்தக்க பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. சபை மெம்பர்களின் பரிசீலனைக்கு வந்த விஷயங்களில் எல்லாம் அவர்கள் காட்டிவந்த பொறுப்புள்ள உணர்ச்சியைப்பற்றி எனக்கு நன்கு மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் பொது ஜன விஷயங்களை அவர்கள் நடத்திவரும் மாதிரியிலிருந்து நிர்வாகத்தின் அலுவல்களில் பொது ஜனங்களைச் சேர்த்துக் கொள்ளுவதின் வியாபகத்தை விரிவுபடுத்துவது நியாயமென்று நான் உணருகிறேன். ஆகையால் திவானுடனும் ஒரு கவுன்ஸிலருடனும் சேர்ந்து நிர்வாகத்தை நடத்த இரண்டு பொது ஜன ஆதரவுள்ள மந்திரிகளைச் சேர்த்துக்கொள்ளுவதன் மூலம் நிர்வாக சபையைத் திருத்தி அமைப்பதென்று நான் நிச்சயித்திருக்கிறேன். இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் இருவரைத் தேர்ந்தெடுத்து, மந்திரிகளாக நியமனம் செய்வதற்காக எனக்கு அனுப்பும்படி சட்ட நிர்மாண சபையின் அங்கத்தினர்களை வேண்டிக்கொள்ள உத்தேசிக்கிறேன். அவ்விதம் நியமிக்கப்பட்ட மந்திரிகள் அவர்களுக்கு அளிக்கப்படும் இலாகாக்களின் பொறுப்பை வகிப்பார்கள். அவர்களின் அதிகாரங்களும் அலுவல்களும் தற்பொழுதுள்ள நிர்வாகத்தில் கௌன்ஸிலர்களுக்கு ஏற்பட்டிருப்பதுபோலிருந்து வரும். மந்திரிகள் என்னுடைய விருப்பப்படி உத்தியோகம் வகித்து வருவார்கள். சாதாரணமாக அவர்கள் எந்த சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ அதன் காலத்தின் முடிவுவரை அவர்கள் உத்தியோகம் வகிப்பார்கள். மேலும் முந்திய சபை கலைக்கப்பட்டு புதிய சபை அமைக்கப்பட்டு புதிய நியமனங்கள் செய்யப்படும்வரையில் அவர்களின் உத்தியோகம் நீடிக்கும். ஆனால் சட்ட சபையின் கூட்டத்தில் ஆஜராயிருந்து, வோட் செய்யும் அங்கத்தினர்களின்

மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையானவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றினால் மந்திரிகள் தங்கள் பதவியிலிருந்து அகற்றப்படுவார்கள்.

5. இந்த ஏற்பாட்டை சாத்தியமானவரையில் துரிதமாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பது எனது விருப்பம். ஆகையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் இருவரைத் தேர்ந்தெடுக்க சட்ட நிர்மாண சபையை வெகு சீக்கிரத்தில் கூட்டும்படிக்கும், 15—8—47-ல் உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளுமாறு உசித காலத்தில் நியமிக்கப்படுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இருவர்களின் பெயர்களை எனக்கு சமர்ப்பிக்கும்படிக்கும் திவான் அவர்களுக்கு உத்திரவு இடுகிறேன்.

6. நான் மேற்கொள்ள உத்தேசிக்கும் திட்டங்கள் பொது ஜனங்களால் வரவேற்கப்படும் என்று நான் நம்புகிறேன். மந்திரிகள் மகத்தான பொறுப்பை ஏற்கவேண்டியிருக்கும். அவர்கள் இந்தப் பொறுப்பை நேர்மையுடனும் திறம்படவும் வகிப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. அவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளாகயிருக்கலாம். ஆகிலும் அதன்மூலம் அவர்கள் குறைகூறப்படுவதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமென்று எதிர்பார்க்கமுடியாது. ஜனநாயகம் பரவுவதிலிருந்து குறைகூறுவது நின்றுபோய்விடுமென்று பொருள்படாது. மற்றெல்லோரையும் போலவே மந்திரிகளும் நியாயமான குறைகூறுவதற்கு செவிசாய்க்கக் கடமைப்பட்டவர்கள். ஸமஸ்தானத்தின் எதிர்காலத்தைப்பற்றி எனக்கு அபாரமான நம்பிக்கை உண்டு. எதிர்காலத்தில் மன்னரும் பிரஜைகளும் ஒருமனப்பட்ட கோஷ்டியாக பொதுஜன நலன் ஒன்றை மட்டும் மனதிலிருத்தி வேலைசெய்து வருவார்கள். இந்த உன்னதமான முயற்சியில் சம்பந்தபட்ட எல்லோரும், உத்தியோகஸ்தர்களும, உத்தியோகப்பற்றற்றவர்களும், சமஸ்தான பிரஜைகளும் ஒத்துழைக்கவேண்டுமாய் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

7. வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை வழங்குவதென்று கவர்ன்மெண்டார் முடிவு செய்திருக்கிறார்களென்று நீங்கள் அறிவீர்கள். அதை அடிப்படையாகக்கொண்டு சட்ட நிர்மாண சபைக்கான தேறுதல் நடைபெறும். மனிதனுக்கு ஓட்டுரிமை மட்டும் வழங்கினால் போதாதென்று நான் கருதுகிறேன். அவன் அதை விவேகத்துடனும் நல்ல வகையிலும் உபயோகிக்க கற்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஆரம்பக் கல்வியையாவது போதிப்பதன் மூலம்தான் இதை நிறைவேற்ற முடியும். 1925-ம் ௵ முதல் ஆரம்பக்கல்வி சட்ட பூர்வமாக அமுல் செய்யப்பட்டுவருகிறது. சமஸ்தானத்தில் 263 பள்ளிக்கூடங்களிருந்து வருகின்றன. ஆரம்பக்கல்வியை கட்டாயமாக போதிப்பதுதான் நமது லக்ஷியம். இது சமஸ்தானத்தின் பல்வேறு பாகங்களில் அமுல் செய்யப்பட்டுவருகிறது. சமஸ்தானம் பூராவிலும் அதைக் கட்டாயப்படுத்தும் உத்தேசத்துடன் ஆரம்பக்கல்வியை போதிப்பதற்காக ஸமஸ்தானத்தை 7 வட்டாரங்களாகப் பிரிக்கவேண்டுமென்றும் உடன் காலத்திலேயே சமஸ்தானத்தின் பாதி

பரப்புக்கு வரக்கூடிய 3 வட்டாரங்களில் ஆரம்பக் கல்வியை கட்டாயப்படுத்துவதென்றும் தீர்மானித்திருக்கிறேன். இந்த திட்டம் மற்றொரு பாதிக்கும் காலக்கிரமத்தில் விஸ்தரிக்கப்படும். வெகு சீக்கிரத்தில் சமஸ்தானத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு குடியிருப்பிலும் கட்டாய ஆரம்பக் கல்வியை அமுல் நடத்த சாத்தியமாகுமென்று நான் நம்புகிறேன்.

8. சென்ற சில வருடங்களாக புதுக்கோட்டை நகர பரிபாலன சபையின் நிர்வாகத்திற்கு கவர்ன்மெண்டாரால் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகப் பற்றற்ற ஒரு சேர்மன் அக்கிராசனம் வகித்து வந்திருக்கிறார். இந்த முறை மிகவும் திருப்திகரமாக இருந்திருப்பதால் நகர பரிபாலன சபைக்கு அதன் சேர்மனை தேர்ந்தெடுக்கும் உரிமையை வழங்குவதற்கு உசிதகாலம் வந்துவிட்டதென்று நான் நினைக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மனாலும் நகர சபையாலும் செயல் அதிகாரியின் (Executive authority) நியமனத்துக்கு அவசியம் ஏற்படுத்தாமல் பொது ஜனங்களின் மேன்மையான அக்கரைகளுக்கு உகந்தவாறு நகர பரிபாலன நிர்வாகம் ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும் நடத்தப்படுமென்று நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

9. நான் இப்பொழுது பிரகடனம் செய்திருக்கும் அரசியல் சீர்திருத்தங்கள் நமது சமஸ்தானத்தின் சரித்திரத்தில் ஒரு புதிய யுகத்தை ஆரம்பிக்குமென்றும், எனது நிர்வாகத்தை இன்னும் அதிகமாக ஜனநாயகம் கொண்டதாகச்செய்ய மேலும் நடவடிக்கைகளை ஆலோசனை செய்ய எனக்கு சாத்தியமாகும் வகையில் சீர்திருத்தங்கள் பொறுப்புடனும் வெற்றிகரமாகவும் நடைமுறையில் நடத்தப்படுமென்றும் நான் நம்புகிறேன். ஸ்ரீ-பிரஹதம்பாளின் அருளினால் இந்தப் புதிய யுகம் என்னுடைய ராஜவிச்வாசமுள்ள அன்புமிகுந்த பிரஜைகள் எல்லோருக்கும் சந்தோஷத்தையும் சுபிக்ஷத்தையும் அருள்புரியுமாக.

THE NEW PALACE,
PUDUKKOTTAI,
15th July, 1947.

RAJAGOPALA TONDAIMAN,
Raja of Pudukkottai State.

"நமது அரசகுலத்தின் வரலாறு."

(*K. R.* வெங்கட்டராம அய்யர்).

கி. பி. 1750-ஆம் ஆண்டில் வெங்கண்ணா என்ற ஆந்திரக் கவிஞரால் இயற்றப்பெற்ற "தொண்டைமான் வமிசாவளி" என்ற இனிமை வாய்ந்த தெலுங்குக் காவியத்தில் தொண்டைமான் அரசகுலத்தாரின் வரலாறு சித்தரிக்கப் பெற்றுள்ளது. இச்சரித்திர வரலாறுகள் ஆதாரங்களோடும் மேற்கோள்களோடும் கீழே தொகுத்து விளக்கப் பெற்றுள்ளன.

தொண்டைமான் மன்னர் குலத்தார் கள்ளர் என்ற வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்கள் வாழ்ந்த நிலப்பகுதி முதலிய வரலாறுகளை ஆராயப்புகின், இவர்கள் இக்காலத்துத் திருப்பதி என்று வழங்கும், திருவேங்கடத்திலும், அதைச்

சார்ந்துள்ள பெருநிலப்பகுதிகளிலும் வசித்து வந்த ஒரு கூட்டத்தாராவர். இக்கூற்றிற்குச் சங்க நூல்களே சான்று பகர்கின்றன. இவ்வேங்கடமலையைச் சார்ந்துள்ள காடுகளில் இவர்கள் யானைகளை வேட்டையாடிப் பிடித்தும், பழக்கியும், அவைகளின் தந்தங்களை விலைப் பொருளாகக் கொடுத்துப் பண்டமாற்று என்ற வியாபார முறையை மேற்கொண்டு, தங்களுக்கு வேண்டிய தானியப் பொருள்களைப் பெற்றும் வந்தனர் என்னும் கூற்றை "அகநானூறு" என்ற சங்கநூல் இனிது விளக்கிச் சொல்கிறது.

நிற்க பல்லவர்களின் ஆட்சியின் கீழ்த்தொண்டைமண்டல நிலப்பகுதியும் உட்பட்டது. இத்தொண்டைமான்களும் முத்தரையர் என்ற வகுப்பினர்களும் பல்லவ அரசகுலத்தாரோடு கூட்டுறவு ஏற்பட்டுத் திருமணம் முதலிய சிறப்பு வகையால் பிரிக்க இயலாத ஓர் குலத்தாராக இணைப்புற்றனர். பல்லவ நாட்டுப் பிரபுக்கள் குழாங்களில் இவர்கள் மேன்மையும் சிறப்பும் அமைந்த உயர் பதவிகளைப் பெற்று வாழ்ந்து வந்தனர். இவர்கள் பல்லவப்படைகளுக்குத் தலைவர்கவும், கைப்பற்றிய நாடுகளின் செங்கோன்மையை நடாத்தும் சிறந்த பொறுப்பையும் மேற்கொண்டு விளங்கினர். இவ்வாறு தளகர்த்தர்களாவும், நாட்டதிகாரிகளாகவும் விளங்கிய தொண்டைமான்களின் உதவிக் கூட்டத்தாராகிய கள்ளர்கள் தென்னாடு நோக்கிச்சென்று, இச்சமஸ்தானத்தின் வடகிழக்குப் பகுதியில்குன்றுண்டார் கோயில் வரையில் குடியேறினார்கள்.

சற்றேறக்குறைய கி. பி. 725 முதல் 789 வரையில் ஆட்சி செலுத்திய நந்திவர்மப் பல்லவமல்லன், தன்பகைவர்களுக்கு உதவி அளித்து வந்த தென்னாட்டு மன்னர்களுடன் அடிக்கடி போர் நிகழ்த்த வேண்டியதிருந்தது. அவனது தென்னாட்டுப் போர்களில், அவனுக்கு உதவி செய்தவர்கள், ஆலி நாட்டார், திருமங்கை ஆள்வாரின் தொண்டர்கள் முதலியோராவர். இத்தொண்டர்களில் ஒருவர், நமது சமஸ்தானத்துத் தொண்டைமான் அரசகுலத்தின் முதற்றலைவராவர். "கள்ளத் திருமங்கை ஆழ்வார் மந்திரிவர்க்கத்தினுடைய வங்கிசமான நாட்டார் தொண்டைமான் வமிசத்தினர்"—என நமது ஸமஸ்தானத்தில் ஓர் சாசனம் பகர்கின்றது. இவ்வமிசத்தின் ஒரு கிளை, அறந்தாங்கியில் குடியேறிப் புதுக்கோட்டை நகருக்கு சுமார் 10 மைல்களுக்குக் கிழக்கேயுள்ள பழையூரை கைப்பற்றிப் பின்னர் மேற்கிலும் சில நாடுகளைக் கைக்கொண்டு தங்களது வெற்றியின் மேன்மையை நிலைநாட்டினர். கி. பி. 14 அல்லது 15-ஆம் நூற்றாண்டுகளில் அறந்தாங்கித் தொண்டைமான் அரசகுலத்தார்கள், நமது சமஸ்தானத்தின் பெரும்பான்மையான நிலப் பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி நடாத்தித் தங்களது. அறச்செயல்களைக் கோயில்களில் சாஸனங்களாகப் பொறித்தனர். இப்பொழுது, பாலைவனத்திலுள்ள ஜமீன்தார்கள் இக்கிளையைச் சார்ந்தவர்கள் எனத்தெரிகின்றது. மற்றொரு கிளையார் கரம்பக்குடிக்கு அருகாமையிலுள்ள அம்புக்கோயிலில் குடியேறியுள்ளார்கள். அப்பொழுது அவர்களின் தலைவர் தொண்டைமான் சக்கரவர்த்தி என்பவரேயாவர். அவர் வீரம் நிறையப் பெற்றவர். அவருடன் வேங்கடாசலப் பல்லவராயரும் அம்புக்கோயிலுக்கு உடன் வந்தவராவர்.

இப்பொழுது "அம்புக்கோயில்" என்று வழங்கும் கிராமத்தின் பண்டைப் பெயர் "அழும்பில்" என்பதேயாகும். இப்பெயரை வலியுறுத்தற்குத் தக்கசான்று கள் அகநானூற்றில் காணலாம். இவ்வழும்பில் என்ற சொல்லின் உண்மைப் பொருளை ஆராயுங்காலத்து, அழிம்பு + இல் எனப்பிரித்து, குற்றம் குறை ஏதும் நடவாத ஊர் எனப் பொருள் கொள்ளக்கிடக்கின்றது. மேலும் "அழிம்பு" என்ற சொல் திரிந்து "அழும்பு" என வழங்கி வந்தது எனக்கூறல் மிகையாகாது. சோழர் ஆட்சிக் காலத்தில், இராசராசவள நாட்டின், பன்றி சூழ்நாட்டின் நகரம், அழும்பில் எனபதேயாகும். இவ்வழும்பில் என்பதே பின்னர் அம்பில் என மாறி வழங்கப் பெற்றது. இவ்வூரிலுள்ள கோயிலை ஆதாரமாகக் கொண்டு இவ்வூரை அம்பில் கோயில் என வழங்கிப் பின், காலம் செல்லச் செல்ல மக்கள் இதனை அம்புக் கோயில் எனத்திரித்து வழங்கப் பெறுவாராயினர். கி. பி. 1062 முதல் 1069-ஆம் ஆண்டுவரை ஆட்சி செலுத்திய வீரராசேந்திர சோழன் காலத்தில் இக்கோயில் நிருமாணிக்கப் பெற்றது. பழமையான கல் வெட்டுக்களில் இக்கோயிலின் பெயர் வீரராசேந்திர சோழீவரம் என வழங்குதல் காணலாம்.

அழும்பில் நாட்டில் குடியேறிய கள்ளர் கூட்டத்தினர் பத்துப் பிரிவினராவர். இப்பிரிவினரில் ஒருவர், நமது தொண்டைமான் வமிசத்தினராவர். இப்பிரிவி னரில் ஒரு பிரிவினருக்குப் "பன்றி கொண்டான்" என்ற பெயர் வழங்கப் பெற்றது, பன்றி நாட்டைக் கொண்டவர்களாதலால் இப்பெயரைப் பெற்றனர். இவர்களுக்குச் சற்றுப் பிற்காலத்தில் குடியேறிய ஒரு வகுப்பினர்களுக்குப் "பின் பன்றி கொண்டான்" எனப் பெயர் வழங்கப் பெற்றது. தன்னை எதிர்த்த பகை வர்களைப் போரில்வென்று இந்நாட்டாட்சியைக் கைக்கொண்ட பகுதியினர் "போர்ப்பன்றி கொண்டான்" எனப் பெயர் பெற்றனர். இப்பத்துப் பிரிவினர் களில், ஐவகைக் கூட்டத்தினர் ஒரு சேர, வடக்களூர் என்ற வடபாகத்திலும் எஞ்சிய ஐவகைக் கூட்டத்தினர் தெக்களூர் என்ற தென் பாகத்திலும் குடியேறி னர். இக்கூட்டத்தினருக்கு "அரசு" என்ற பட்டப்பெயர் உண்டு. ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு குப்பத்தின் ஆட்சி இருந்தது. இவர்களுடன் ஐவகைக் கூட்டத்தின் குடிமக்களும் குடியேறினர். இந்நிலப் பகுதியில், மக்கள் எல்லாச் செல்வங்களும் நிறையப் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால் கி. பி. 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டில் கலகமும், நாட்டின்கண் பஞ்சமும் ஏற்பட்டன. இத்தகைய மாறுபாட்டிற்கு முக்கிய காரணம் விஜய நகர மன்னர்களின் ஆதிக்கத்தின் சீர் குலைவேயாகும். நாடு வற்கடம் பூண்டமையாலும், நாட்டுமக்களிடையே வறு மைப் பிணி ஆட்சி செலுத்தத் தலைப்பட்டமையாலும், இவ்வெல்லாக் கூட்டத் தினரும் தொண்டைமானைத் தங்களது தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். பின்னர் தங்களது அரச சுதந்திரத்தையும் அன்னார்களுக்கு வழங்கிவிட்டனர். அழும்பில் நாடும் தன்னரசு நாடாக அமைந்தது. இத்தொண்டைமான் மன்னர்களைக் குறித்துக் கல்வெட்டுகள் பின் வருமாறு கூறுகின்றன. அஃதாவது, "இந்திரகுல வங்கிஷன் காசிப கோத்திரத்தில் வந்தோன். இராசராச வளநாடு, இராசேந்திர

சோழவளநாடு, பன்றி சூழ்வளநாடு அம்பில் தெற்கிலூரிலிருக்கும் அம்பில் நாட்டு அதிபன் தென் கொடியாதிபன் வட கரைப் புலி வாகை மாலைப்புயனும்"—

அமும்பில் கோயிலின்கண் பொறிக்கப் பெற்றுள்ள ஒரு கல் வெட்டு "ஆனைத் தொண்டைமான்" என ஒருவரைக் குறிக்கின்றது. பச்சைத் தொண்டைமானின் மகன் ஆவடை இரகுநாதராயத் தொண்டைமான் தன்னுடைய வீரச் செயல்களை யும் திறமையையும் விளக்கக் காட்டி, விஜயநகர மன்னரான ஸ்ரீரங்கராயரிடம் மரியாதைக்குறிய பல பெருமைகளையும் வெகு மதிகளையும் பெற்றார். அவை, "ராயராகுத்த ராய வஜ்ஜுரூடு ராயமாண்யுடு ராய" என்ற சிறந்த பெருமைக்குறிய பட்டங்களும், யானைகள், குதிரைகள், முரசுகள், குடைகள், தீவட்டிகள், கட்டியக் காரர்கள் முதலிய அரசர் பெருமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்ற அங்கங்களும், கெண்டபேரண்டபட்சி, சிங்கக்கொடி, மீனக்கொடி, கருடக்கொடி, அனுமக்கொடி முதலிய பிறவுமாம்!!

இவ்வாவடை இரகுநாதராயத் தொண்டைமானின் மகன் ரெகுநாத ராயத் தொண்டைமான் அவர்கள், அப்பொழுது புதுக்கோட்டையை ஆண்டு வந்த பல்லவராயரிடமிருந்து, புதுக்கோட்டை, திருமயம் முதலிய நிலப்பகுதிகளைத் தன்னாட்சியின் கீழ்க்கொணர்ந்தார். பின்னர், அமும்பில் தன்னரசு நாடு, புதுக் கோட்டை சமஸ்தானமாக மாற்றியமைக்கப்பட்டது. பண்டை நிலை இவ்வாறிருக்க, இற்றை நாளில் நம் புதுக்கோட்டை சமஸ்தானமாக விளங்குவதோடு, இந்திய ஐக்கிய நாட்டாட்சியுடன் இணைக்கப்படும் பெருமை பெற்றிருக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ளவர்களுக்குப் புதுக்கோட்டை அரசர் தொன்மை வாய்ந்த ஒரு பண்பாட்டிற்கு எடுத்துக் காட்டாவர். அஃதாவது, "சங்ககாலம் முதல் இற்றை நாள் வரையில் பாணர்களின் கூட்டத்தாரல் புகழ் பெற்ற புஜபலம் என்ற பண்பும், நியாயமான அறச்செயல்களைக் கொண்டு, கதைகள் கல்வி முதலியவை களை ஆதரிக்கும் நோக்கத்தைக் கொண்ட மாட்சிமைப்பட்ட பண்பாடும், இடைக் காலத்தில் பல்லவ சோழ சாம்ராஜ்யங்களில் உயர்ந்த பதவிகளைப் பெற்றுப் பின்னர் ஆங்கிலேய சாம்ராஜ்யத்திற்குத் தீரமும் நம்பிக்கையும் வாய்ந்த நண்பர் களாகப் புகழ் பெற்ற அரசியற்றிறம் என்ற பண்பாடும் ஆகிய மூவகைப் பண்பாடு களும் நிறைந்தவர்களின் வமிசத்தில் தோன்றியவர் நமது தொண்டைமான் மன்னர்."—இன்று உதயமாய் புதிய இச்சகாப்தத்தில் நம்பாவனையால் அமைக்கப் பெறும் வருங்கால இந்தியாவைச் சீர்த்திருத்தும் சிற்பிகளின் முன்னணியில், நமது மாட்சி மிக்க மன்னரும் தலை சிறந்து விளங்குவார் என்பதற்கு ஐயமேயில்லை.

ஐக்கிய சங்கங்கள்

ஐக்கிய சங்கம் என்பது பொதுஜனங்களின் தேவைகளைப்பெற அவரவர் களாகவே இஷ்டப்பட்டு ஒன்றுசேர்ந்து ஏற்படுத்தும் ஸ்தாபனமாகும். ஐக்கிய சங்கத்திற்கு ஜாதிமத பேதங்கள் கிடையாது. பொதுஜனங்கள் பொறுப்பாட்சி யேற்கவேண்டுமானல் ஐக்கிய சங்கத்தின் கொள்கையை அபிவிருத்தி செய்து

அதை அனுபவத்திற்குக் கொண்டுவரவேண்டும். பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வண்ணம் நமது ஸமஸ்தானத்தில் பலவித ஐக்கிய சங்கங்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி அறிந்துகொள்ள நீங்கள் ஆவலுள்ளவர்களாக யிருக்கலாம்.

முதல் முதலாக 1904-ம்வருஷத்திய இந்திய ஐக்கிய சங்கங்களின் சட்டத்தை ஒத்து நமது ஸமஸ்தானத்தில் 1908-ம்வருஷத்திய 3-ம் நம்பர் ரெகுலேஷனாகச் சட்டமாக்கப்பட்டு அமுலுக்குவந்தது. அதன்பிரகாரம் திவான் பேஷ்கார் ஐக்கிய சங்கங்களின் (ex-officio) ரிஜிஸ்தராராகச் செய்யப்பட்டு இன்றுவரை அது அமுலிலிருந்துவருகிறது. அந்தக்காலத்தில் ஐக்கியசங்கங்களின் கொள்கைகளும், எவ்விதம் ஓர் சங்கத்தை நடத்துவதென்பதும் பலருக்குத் தெரியாமலிருந்தது. அந்த வருஷம் கரம்பக்குடியில் ஓர் சங்கமும் டவுனில் பண்டங்கள் விற்பனை செய்யும் சங்கம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டன. தஞ்சாவூர் வாசியும் ஆலங்குடியில் சப் மாஜிஸ்திரேட் உத்யோகம் வகித்தவருமான C. V. வேங்கடவராஹ தீக்ஷதர் இந்த ஐக்கியசங்கங்களின் அபிவிருத்திக்குப் பாடுபட்டார். ஆலங்குடியில் ஐக்கிய சங்கம் ஏற்படுத்துவதற்கும் நமது ஸமஸ்தானத்திலேயே ஐக்கிய நாணய சங்க ஸ்தாபனங்களில் பெரிதாக யிருந்துவரும் தலைநகரிலுள்ள டவுன் பாங்க் ஏற்படுத்துவதற்கும் காரண பூதராக யிருந்தார். 1319-ம் பஸலிக் கடைசியில் ஐந்து சங்கங்கள்தானிருந்தன. அவைகளில் ஒன்று மூடப்பட்டது. 1910-ம்வருஷத்திலிருந்து 1922-வரை 46 புதிய சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டன. 1922-முதல் 1928-வரை அதிகப்படியாக 99 சங்கங்கள் நிறுவப்பட்டன. 1928-லிருந்து 1938-வரை உலக பண்டங்களின் நெருக்கடியால் ஸ்தாபனங்கள் விருத்தியடையக் காரணமில்லாதிருந்தது. அந்த இடைக்காலத்தில் 12 சங்கங்கள்தான் பதிவுசெய்யப்பட்டன. உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. பண்டங்களின் விலைக்கட்டுப்பாட்டினால் அதிகப்படியான ஐக்கியப் பண்டகசாலைகள் ஏற்பட்டன. 30 பண்டகசாலைகள் இந்த இடைக்காலத்தில் ஏற்பட்டு அநேக ஸ்தாபனங்கள் இந்த நெருக்கடியான காலத்திலும்கூட வெகுநன்றாக வேலை செய்துவந்திருக்கின்றன.

நமது ஸமஸ்தானத்தில் இதுவரை பதிவு செயயப்பட்ட 204 சங்கஙகளில் சரியாக வேலை செய்யாமலும் இன்னும் பல காரணங்களாலும் 74 சங்கங்கள் மூடப்பட்டன. இப்பொழுது 130 சங்கங்கள் வேலைசெய்துவருகின்றன. அவைகள் ஐக்கிய மத்யசங்கம் (Co-operative Central Bank) என்பது ஒன்று அதுதான் மற்ற ஸமஸ்தான ஐக்கிய சங்கங்களுக்கு நிதி கொடுத்து உதவுவது. இரண்டு நாணய சங்கங்களிருக்கின்றன. 3 பொறுப்பு வாய்ந்தவரையறுக்கப்பட்ட நாணய சங்கங்களிருக்கின்றன. இவைகளைத்தவிர விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய 79 கிராம சங்கங்களிருக்கின்றன. 32 பண்டகசாலைகள் ஸமஸ்தானத்திலுள்ள முக்கிய கிராமங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன. தலைநகரில் மொத்த விலைக்குச் சாமான்களை விநியோகிக்கும் மத்திய பண்டகசாலையொன்றும் ஸமஸ்தானத்திற்கே மில்துணிகளை வாங்கி விநியோகிக்கும் மத்திய துணிகள் விற்பனைச் சங்கமொன்றும் இருக்கின்றன. இவைகளைத்தவிற ஓர் ஐக்கிய அச்சுக்கூடமும், இரண்டு கடன்களும் விற்பனைகளும் செய்யும் சங்கங்களும், மூன்று

கைத்தறியாளர்கள் சங்கங்களும், இரண்டு மாணவர்கள் பண்டகசாலையும், பெயரளவில் ஓர் மருந்து விற்பனை ஸ்தாபனமும், கட்டிடங்கள் சங்கமொன்றும், அதன் அங்கத்தினர்களிடையே சிக்கனத்தை அபிவிருத்திசெய்ய ஓர் சிக்கனச் சங்கமும் நடைபெறுகின்றன.

இந்த ஸ்தாபனத்தின் அபிவிருத்தியைப்பற்றிப் பின்வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும்.

புதுவை அரசர் பழந்தமிழ் மன்னர்.

(வித்வான் விசு. திருநாவுக்கரசு செட்டியார், Rani's Girls High School.)

நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலத்திற்கு முன்பு தொட்டே தமிழ்நாடு மூப்பெரும் அரசர்களால் ஆளப்பட்டுவந்தது. அவர்களே சேர, சோழ, பாண்டியர் என்போராவர். இம்மூவர் பிறந்த குடி மிகப்பெரும் தொன்மை வாய்ந்தது. 'வழங்குவதுள் வீழ்ந்தக்கண்ணும்' எனத்தொடங்கும் திருக்குறளில் வரும் 'பழங்குடி' என்ற சொல்லுக்கு, சேரர், சோழர்' 'பாண்டியர்' என்றாற் போல படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் தொன்மையானகுடி' எனப் பரிமேலழகர் உரை எழுதுவாராயினர். இதிலிருந்து உலகம் என்றைக்குத் தோன்றியதோ அன்றே இத்தொன்மையான குடியும் தோன்றியது என அறியலாம்.

அன்றியும், இக்குடி வழிவந்த கள்ளர், மறவர், என்போர் வீரராய் வாழ்ந்து நாட்டுக்கு வெற்றிச் செல்வத்தை வழங்கிய வண்மையராவர். இம்மறக்குடி வந்த மக்கள் இந்த உலகத்தில் கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பே வாளேந்தி வந்தவராவர் என்பதை 'கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே, வாளோடு மூத்தகுடி' என்னும் புறப்பொருள் வெண்பாமாலையால் அறிகிறோம்.

சோழர் என்னும் பெருங்குடி மரபினர் பூம்புகார் என்னும் காவிரிப்பூம் பட்டிணத்தைத் தலைநகராகக்கொண்டு செங்கோல் செலுத்தினர். பிற்காலத்தே இக்குடியின் கிளையினர் காஞ்சிபுரத்தில் அரசேற்று நடத்தினர் இவருள் தொடுகழற் கிள்ளி, துணை இளங்கிள்ளி என்பவர்கள் அரசாண்டனர். இவர்கட்குப் பிறகு தொண்டைமான இளந்திரையன் என்பான் அரசு வீற்றிருந்ததாகக் கருத இடமுண்டு. இவன் கிள்ளி வளவனுக்கும் நாக கன்னிகையாகிய பீலிவளை என்பவளுக்கும் பிறந்தவன் என்று கூறப்படுகிறது. இவன் அதிகமானஞ்சி காலத்தவன். 'தொண்டைமானுழைச் சென்ற ஔவைக்கு' (புறம் 95) எனப் படும் புறப்பாட்டாலும் தொண்டைமான் மரபிலேதோன்றிய அரசர்கள் சீரும் சிறப்பும் பெறவாழ்ந்த இயல்பு அறியப்படுகிறது. சங்க இலக்கியங்களில் தொண்டைமான் மரபினரைப்பற்றி இலைமறைகாய்போல் பல குறிப்புகள் காணப் படுகின்றன. அவை அனைத்தும் தொகுத்து ஆராயப்பெறவேண்டும்.

5000 ஆண்டுக்கு முன்பு தொட்டே தொன்மையும் சிறப்பும் பெற்று வளர்ந்த தொண்டைமான் மரபிலே தோன்றிய நமது மன்னர் மேன்மை தங்கிய பிரஹதம்பா தாஸ் ஸ்ரீ ராஜாகோபாலத் தொண்டைமான் பஹதூர் அவர்கள் மூச்சங்கத்திற்கும் மூவேந்தருக்கும் பிறகு தாமொருவரே பலகோடித் தமிழர்க்கு ஒரு மன்னராய் விளங்குகின்றார். நம்மரசரும் அவர் மரபும் வழி வழிச் சிறக்க நாமெல்லோரும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

வாழ்க நம் மன்னர்! வளர்க அவர் மரபு!

நமது கிராம வாசிகள் வாழ்க!

(சா. தேவநேசன்).

மேற்கத்திய நாடுகளுக்கு மாறாக நமது தாய் நாடாகிய இந்தியா ஜனத்தொகையில் பெரும்பாலும் விவசாயிகளையுடையது. மேல் நாடுகளில் அதிகம் பேர் யந்திரத் தொழிற்சாலைகளிலும், இதர தொழில் வகைகளிலும் ஈடுபட்டவராவர். பரந்த பாரத நாட்டில் பெரும் பட்டினங்கள் சிலவே. குக்கிராமங்களே லக்ஷக்கணக்கானவை. ஆதலின் நம் நாட்டின் கிராமங்கள் செழித்தோங்கி அறிவிலும் ஆற்றலிலும் விருத்தியடைவதே தேசமுன்னேற்றத்திற்கு அடிப்படையான தேவை. கிராமங்களின்றி பட்டிணங்கள் வாழ்வது எங்ஙனம்? கிராம வாசி உழுது பயிரிட்டுத் தந்தாலல்லாது பட்டிணத்தான் பசி எவ்வாறு தீரும்? விவசாயி வரிப்பணமன்றோ தேசிய வருமானத்திற்பெரும்பாகம்.

ஆதலால் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் வசிக்கும் கிராம வாசிகள் பல துறைகளிலும் முன்னேற்றமடையவேண்டுமென்பது தர்பாரின் கோரிக்கையாகும்.

முதலாவது கல்வி. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்பது பழமொழி. ஆனால் புது உலகில், புது இந்தியாவில் புதுப்புதுவையில் இப்பொன்சொல் இன்னும் எவ்வளவு அதிகம் பாராட்டப்படத்தக்கது! கையெழுத்துக்கூட போடத்தெரியாத கிராம மக்கள் இன்னும் எத்தனை திரள் நம் நாட்டிலுண்டு. கட்டாய ஆரம்பக்கல்வி என்பது நமது ஸமஸ்தானச் சட்டமாக இருந்தபோதிலும், பொது மக்களின் ஒத்துழைப்பும் உற்சாகமுமின்றி சட்டம் மாத்திரம் கடுதாசியிலிருந்தால் அது ஏட்டுச்சுரக்காயே ஆகும். முக்கியமாக பெண் கல்வி அபிருத்தி, அதிலும் கிராமப் பெண்கள் கல்வியில் முன்னேறுவது அத்தியாவசியம்.

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை", "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்றெல்லாம் பெரியார் பாடியுள்ளார். ஆயினும் நமது கிராம மக்கள் நவீன சாஸ்திர ஆராய்ச்சிகளின் பலா பலன்களைக் கருத்திலமைத்து, நவீன விவசாயக் கருவிகளைக் கையாடி வருவார்களேயானால் நம் ஸமஸ்தானம் இன்னும் செழித்து விளங்குமென்பதில் ஐயமில்லை. அவ்விதமாகவே குடிசைத்

தொழில்கள் பல விருத்தியடைய கிராம மக்கள் முயற்சி எடுப்பார்களேயானல் அவர்கள் செல்வ நிலை இன்னும் முன்னேற சாத்தியமாகும். கூட்டுறவு சங்கங்களின் மூலமாக கிராமங்கள் பெறக்கூடிய நன்மைகள் கணக்கற்றவை.

பருவம் கடந்தவர் பலர் எழுத்தறிவற்றவர்களாக இருக்கிறார்கள். முதியோர் கல்வி இயக்கம் முழு இந்தியாவிலும் பரவி வருகிறது. வெகு சொற்ப காலத்தில் எளிதான வகையில் பருவம் கடந்தவர்கள் எழுதப்படிக்க கற்றுக்கொள்ளக்கூடிய முறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

சுகாதார விஷயத்திலும் நமது கிராமங்கள் அதிகம் முன்னேறவேண்டும். மருத்துவ முறைகளைச் சரிவரக்கற்று தேர்ச்சி பெற்ற பலர் கிராமத்தில் ஊழியம் செய்து அதன் சுகாதார நிலைமை சீர் படுத்துவது மிகத்தேவை.

நமது தாய்நாடு சுய ஆட்சி பெறும் இக்காலத்தில் நமது ஸமஸ்தானத்திலுள்ள கிராமங்களும் தங்கள் சுயப்பொறுப்புக்களை உணர்ந்து அவற்றை தீவிரமாக நிறைவேற்றி, ஒவ்வொரு துறையிலும் சீரும் சிறப்புமாக விளங்க ஸமஸ்தானப் பிரஜைகள் யாவரும் கங்கணம் கட்டுவார்களாக.

நமது கிராம வாசிகள்—வாழ்க!

ஆகாரமும் தேகபுஷ்டியும்.

(Mr. V. S. Ganapathi Sastriyal.)

இந்த இரண்டாவது மகாயுத்தத்தால் உலகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இந்த யுத்தத்திற்கு வேண்டிய தேவைகளை கவனிக்குங்கால் நம் தேசத்துக்குத் தேவையான உணவைப்பற்றியும் அந்த உணவை சேகரித்து ஜனங்களுக்குப் பங்கிடு செய்வதைப்பற்றியும் ஸர்க்கார் பெருத்த கவலை எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அவ்வாறு உணவுப் பொருள்களை இந்திய ஸர்க்கார் சேகரிக்க முயலுங்கால் தேசத்திற்குத் தேவையான தான்யங்கள் நமக்குப் போதிய அளவுக்கு நம்மிடம் இல்லை என்று வெளியாயிற்று. நம் தேசத்தில் தற்பொழுது பெரும்பான்மையோர் உண்ணும் உணவுகளில் தான்யங்கள் தான் முக்கியமானவையாகயிருந்துவருகின்றன. அவைகளில் அரிசி முக்கியமானது. அரிசி போதிய அளவுக்கு இல்லை. அரிசிக்குப் பதிலாக உபயோகப்படுத்த இதர தான்யங்கள் போதிய அளவுக்கு கிடைக்கவில்லை. அதனல் ஜனங்களில் பெரும்பாலோர் பட்டினி கிடக்க வேண்டி வருமோவென்ற பெருங் கவலை எங்கும் பரவியிருந்தது. ஆகையால் தேசத்தில் சேகரிக்கக்கூடிய தான்யங்களையும், இறக்குமதி செய்யக்கூடிய தான்யங்களையும் சேகரித்து பகிர்ந்து கொடுக்கும் வேலையை ஸர்க்கார் ஏற்றுகொண்டு பங்கீட்டு திட்டம் ஏற்படுத்தி குறைந்த அளவுக்காவது பெரும்பாலோருக்கு தான்யங்கள் கிடைக்கும்படி ஸர்க்கார் செய்துவருகிருர்கள்.

இதுபோன்ற ஒரு பெரிய முட்டுப்பாடான சமயத்தில் பொதுஜனங்களிடத்தில் உண்மையான அபிமானம் வைத்தவர்களும், தேசக்ஷேமத்தையே தேடுபவர்

களும், ஏழை ஜனங்களிடம் இரக்கமுள்ளவர்களும் செய்யவேண்டிய முதன்மையான கடமை ஒன்று இருக்கிறது. எவ்வளவு நிரம்ப தான்யங்களை சாகுபடி செய்ய முடியுமோ அவ்வளவு சாகுபடி செய்து பங்கீடு என்னும் பொதுஜன சேவையில் ஈடுபடவேண்டும். ரகசியமாகச் சேமித்து வைத்தாலும் கள்ள வியாபாரம் செய்தாலும், கள்ளமார்க்கெட்டில் வாங்கினாலும், ஏழைகளின் வயிற்றில் அடிப்பதாகவே முடிகிறது. ஆகையால் நாம் உண்ணும் ஆகாரத்தில் அனாவசியமானவைகளை விலக்கி ஏழை ஜனங்களுக்கு எவ்வளவு உணவு போய்ச் சேரும்படி செய்யலாமோ அவ்வாறு செய்யவேண்டும் என்று ஒவ்வொரு தேசபக்தனும் உறுதி கொள்ளவேண்டும். பசி விஷயத்தில் அரசியல், மதம் முதலிய வேற்றுமைகள் கிடையாது.

இந்த ஆகார விஷயத்தை மத்திய சர்க்காரே கவனிக்கிறதென்று ஏற்பட்டதிலிருந்து இந்தியரின் ஆரோக்கிய குறைவிற்குக் காரணமும் கண்டுபிடிக்க இயன்றது. தேகத்திற்கு புஷ்டி கொடுக்கக்கூடிய ஆகாரம் ஜனங்கள் உண்ணாததால் ஜனங்கள் பலம் குன்றியிருக்கிறார்கள் என்ற விஷயம் புலப்பட்டது. புஷ்டிகரமான உணவுகள் எல்லா ஜனங்களும் உண்ணும்படியான வசதிகள் உண்டாக்கிவைத்தாலொழிய நம்தேசத்தாரின் தேகபலத்தை அதிகப்படுத்தக்காரணமில்லை.

புஷ்டிகரமான உணவுகள் எவை, அவைகளை எவ்வாறு நம்தேசத்தில் அதிகப்படுத்தலாம் என்ற விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

இப்பொழுது நடந்து பங்கீட்டு ஏற்பாட்டைக்கொண்டு தான்யங்கள் எவ்வாறு பங்கீடு செய்யப்படுகிறதோ அதுபோல் எல்லா ஜனங்களுக்கும் புஷ்டிகரமான உணவுப்பொருள்களைக் கொடுத்து பொதுஜனங்களின் தேகபலத்தையும் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்யக்கூடுமாவென்பதும் ஒரு முக்கியமான வருங்கால பிரச்னை.

மகாயுத்த காலத்தில் இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்ட பல திட்டங்களில் ஆகார இலாகா வெகு நன்றாக வேலை செய்தது. பல வழிகளில் அது செய்து வந்த உதவியால் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட உணவு வயிற்றுக்குப்போதிய அளவை மட்டும் கவனிப்பதோடு நில்லாமல் புஷ்டியும் ஊக்கமும் தரக்கூடிய (protective foods) ஆகாரங்களும் கொடுக்கப்பட்டன. சாதாரணமாக நம் தேசத்தை இங்கிலாந்துடன் ஒப்பிடுமளவில் புஷ்டிகரமான ஆகாரங்களைத் தற்கால சாஸ்திரீய முறைகளில் ஏராளமாகவும் சீக்கிரமாகவும் உண்டாக்குவதற்குத் தேவையான இயந்திர சாதனங்கள் இங்கிலாந்தில் இருக்கின்றன. நம் தேசத்தில் இல்லையென்றே சொல்லலாம். அத்தகைய உணவுகளின் அவசியத்தை அறிந்து அவைகளை வீணாக்காது பகிர்ந்து கொடுப்பதையும், வீணாக்காது பயன்படுத்திக் கொள்வதற்கு பொது ஜனங்களுக்குள் உணர்ச்சியும், ஒத்துழைப்பும் ஜனங்களிடையே இங்கிலாந்தில் இருப்பதுபோல் நம் தேசத்திலும் ஏற்பட்டால் நம் தேசம் வெகு சீக்கிரத்தில் முன்னேற்றமடையமுடியும்.

புஷ்டிகரமான உணவுகள் பொதுஜனங்கள் பிணிகளால் தாக்கப்படாமல் தடுப்பதால் அவைகளை "காக்கும் உணவுகள்" அல்லது "காப்புணவுகள்"

(protective foods) என்றே சொல்லலாம். பால், காய்கறிகள், முட்டை, மீன், மாமிசம் இவைகளே காப்புணவுகள் எனக்கூறப்படுகின்றன. இவைகளில் பாலும், மரக்கறிகளும் அதிகமாக சேர்த்துக்கொண்டாலே மனிதனுக்குத் தேவையான காப்பு அளிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனும் திடமான மனத்துடனும் தேகத்துடனும் யிருப்ப தற்கு அடியிற் காட்டப்பட்டிருப்பதுபோன்ற சீரான உணவு சாப்பிடவேண்டும்.



மேற்கண்ட ஆகாரம் 2,600 காலோரிகள் (calories) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும். உஷ்ணாங்கங்கள் கொண்டதாகயிருக்கிறது. அவ்வளவு ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையாகயிருக்கிறது. ஆனால் தற்போது இந்தியாவில் ஒரு மனிதன் உண்ணும் உணவில் 1,750 உஷ்ணாங்கங்கள் தானிருக்கின்றன. அவையும் அடியிற்கண்டபடி சேர்ந்ததாகப்பரவியிருக்கிறது.



இந்நிலையில் வயிற்றை நிறப்புவதற்கான தானிய தினுசுகளில் அரிசி உண்போர் அரிசியுடன் மற்றொரு தான்யம் தினசரி உணவில் சேர்த்துக்கொள்ள

வேண்டுமென்றும், பால், பருப்பு காய்கறிகள், கீரை தினுசுகள் எண்ணெ நெய், பழம் முதலியவைகள் அநேகமாக பூஜ்யமென்று சொல்லக்கூடிய நிலையில் இருப்பதில் அவைகளையும் பொதுஜன உணவில் சேர்ப்பதற்கான வசதிகள் செய்ய வேண்டியது அத்தியாவசியமென்றும், மற்ற தேசத்தார்களின் உணவு அட்டவணைகளுடன் ஒப்பிட்டால், நம்தேசம் அரைப்பட்டினி தேசமென்றும் தெரிகிறது.

மேலும் அரிசிமட்டும் உண்பதால் வயிறு நிறப்புவதைத் தவிற வேறல்ல. ஊக்கமளிக்கும் ஊன்சத்துகளும் (protein) தேகத்திலுள்ள அவையவங்களின் அமைப்பையும் இந்திரியங்களின் காணங்களையும் மேம்படுத்தக்கூடிய பிராணதங்கள் என்ற விடமின்களும் (Vitamins) உலோக உப்புகள் (mineral salt) ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமான தேவைகள். அவைகள் கோதுமை, கம்பு, கேப்பை போன்ற தான்யங்கள், பால், முட்டை, மீன், மாமிசம் முதலியவைகளில் அடங்கியிருக்கிறது. முக்கியமாக மனிதனுக்குத் தேவையான சகல உணவு சத்துக்களும் பாலில் அனேகமாக அடங்கியிருப்பதால் எல்லா ஜனங்களும் பால் அருந்தக்கூடிய வசதிகள் ஏற்படுத்தவேண்டியது அவசியம். இந்தியாவும், நம் சமஸ்தானமும் சுதந்திரம் பெறுவதில் நம் சுதந்திரத்தை காத்துக்கொள்ள அஸ்திவாரமாகயிருப்பது மனோபலமும், தேகபலமுமே. அவைகள் சரியான உணவுகளைச் சேர்த்து உண்பதால்தான் அடையலாம். ஆகையால் அதிகப் பாலையும் மற்ற உணவுப்பொருள்களையும் உண்டாகுவது நம் தாய்நாட்டுக்கு நாம் செய்யும்கடமையாகும்.

உணவு தானியங்களின் மாசூலை அதிகப்படுத்த, கவனிக்க வேண்டிய சில விவசாய குறிப்புகள்.

(G. துரைசாமி அய்யங்கார்).

யுத்தம் முதல்காரணமாகவும் அதன்பின் காலவசதிகளின் வேறுபாடுகளினால் தானியங்களின் விளைவு திருப்திகரமாய் இல்லாததாலும், இப்பொழுது உணவு பஞ்சம் எங்கும் தோன்றியிருப்பது யாவரும் அறிந்த விஷயம். இம்மாதிரியான நெருக்கடியை நீக்க உலகம் பூராவும் பிரயாசைப்படுகிறார்கள். ஆதலால், இந்த ஸமஸ்தானத்திலுள்ள எல்லா குடிகளும், ஒரே ஐக்கியமனதுடன் இருந்து ஒற்றுமையாக இப்பொழுது வேலை செய்தால்தான், நாம் எல்லோரும் காப்பாற்றிக் கொள்ளமுடியும். ஒவ்வொரு விவசாயியும் அவரது பொறுப்பையுணர்ந்து அவருடைய கடமையை முழுமனதுடன் திறமையாகச் செய்ய முன்வரவேண்டும். நமக்குத் தேவையுள்ள உணவுப் பொருள்களை முக்கால்வாசியாவது நாமே உற்பத்தி செய்யவேண்டிய முறைகளைக் கவனிக்கவேண்டும் பரஸ்பரம் உதவி செய்வதில் ஈடுபடவேண்டும். ஏழை மக்களுக்கு அன்னமளிக்கும் தர்மசிந்தனை நிரம்பிய நம்நாட்டில் தற்சமயம் விவசாயிகள் பாடுபட்டு தானியங்கள் சாகுபடி செய்து ஸர்க்காருக்கு பங்கீட்டுக்காக கொடுப்பதே தற்கால தர்மம். உண்மையான அரசியல் உயர்ந்த தேச பக்தி.

2. உணவுப்பொருள்களின், மாகூல், (1) பருவத்தில் பக்குவமாக பயிர் செய்வது (2) நல்ல பொறுக்கு விதையை உபயோகப்படுத்துவது (3) தகுந்த அளவுக்கு எருவை உபயோகிப்பது, (4) லாயக்கான தரிசுகள், புறம்போக்கு இடங்கள் முதலியதை சாகுபடிக்கு கொண்டுவருதல் முதலியவை கவனிக்கப்படவேண்டும் அதனால் தான்யம் ஜாஸ்திபெற்று நாம் பிரதேசங்களை எதிர்பார்க்காமல் நாமே போஷித்துக்கொள்ளலாம். விவசாயிகளுக்கு மேற்கூறிய அம்சங்களில் உதவி புரிவதற்கு, ஸர்க்காரும் இயன்ற அளவு பொறுப்பு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

3. "ஆடி பட்டம் தேடி விதை" என்ற முன்னோர்களின் வார்த்தைப்படி, இவ்வருஷம், புஞ்சை தான்யங்களுக்கு சௌகரியமாக மழை பெய்துவந்திருப்பதால், அநேகமாய் வரகு, அவரை, கடலை, முதலிய பயிர்களின் விதைப்பு பூர்த்தியாயிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இனி யாவரும் நெல் சாகுபடியில் கவனம் செலுத்தவேண்டியதாயிருக்கிறது. சிலர் வசதியுள்ள குளங்களின் கீழ் வழக்கம்போல சம்பா நாத்தங்காலும் தயாரித்து விதைத்திருக்கலாம். இங்கு வருஷத்துக்கு சராசரி 12,000 ஏக்கர் நெற்பயிர் சாகுபடி செய்யப்படுவதாக கணக்கு தெரிவிக்கிறது. ஆனால் ஒரே ஜாதி நெல்லில்லை பல தினுசுகள் விளைகின்றன. குளத்தின் பாசனத்துக்கு தகுந்தபடி இந்த நெல்வகை வேறுபடுகிறது. பெரும்பாலும் விவசாயிகள் ஆடிபட்டத்தை கைக்கொண்டு 7-மாதம் வயதுள்ள சம்பா விதையை, புளுதி நாத்தங்காலில் விதைத்து மானத்தைப்பார்த்துக்கொண்டு, போதுமான ஜலவசதி ஏற்படும்வரையில் காத்திருந்து நாற்று முத்திப்போனாலும் கூட, கெடுதல்களை கவனியாமல் நட்டு கிடைத்த மாகூலைக்கண்டு திருப்தி அடைகிறார்கள். வெகுநாளாக பழக்கத்திலிருந்துவந்த விதையையும், அனுபவத்தையும், காலவித்தியாசங்களுக்கு தகுந்தபடி மாற்றிக்கொள்ள மனப்பான்மை இல்லாததுதான் காரணம். நம் ஸமஸ்தானம் முழுவதும் வானம்பார்த்த சீமையாதலால் இள தினுசுகள், அதாவது ஐந்துமாதம், ஆறுமாதம்வயதுள்ள சம்பாதான் போடுவதுதான் ஸாவதானம். அப்படி போடுவதால், அறுவடைக்குப் பிறகு கண்மாயில் ஜலம் இருந்தால் மற்றொருபோகம் குறுவைப்பயிராவது, கேப்பையாவது எடுத்துவிடலாம். உலகம் நாகரீகம் அடைவதற்காக, பல இடங்களில் ஆராய்ச்சிப் பண்ணைகள் வைக்கப்பட்டு, அங்கங்கேயுள்ள மண்வளப்பம், ஜலவசதி, காலவேறுபாடுகள் இதர அம்சங்களுக்குத் தகுந்தபடி, தான்யங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, பொருத்தமானதைமட்டும் அபிவிருத்திசெய்து ஜனங்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அதை ஸமஸ்தான மக்களும், விரிவாக, கையாடி மேன்மையை அடைய வழியுண்டு. மேற்கண்ட விவரங்களைப்பற்றி இந்த பத்திரிகையில் வெளியிடப்படும்.

கிச்சலிச்சம்பா என்ற இளம் தினுசு நெல் இவ்விதத்தில் ஆடிபட்டமே விதைத்து சாகுபடியை தொடங்கலாம். கிணற்று இறவையிலும் பயிரிடலாம் 4½-மாதத்தில் பலன் கிடைக்கும் மழையை எதிர்பார்த்து 7-மாத நெல் சாகுபடியை தொடங்குவதைகாட்டிலும், கிச்சலியை விதைத்து, தண்ணீர் ஜாஸ்தி செலவு செய்யாமல் உபயோகித்து ஒரு மாகூலை நிச்சயமாகப்பெறுவது மேன்மையென்று புலப்படவேண்டும். மழை தகுந்த அளவு பெய்து, ஜலவசதி பூர்ணமாயிருந்தால்

அறுபசியில், 2-வதுமுறை கிச்சலியை சாகுபடி செய்தும், மறு வெள்ளாண்மையும் செய்யலாம். இதில் வைக்கோல் ராசிக்குறைவு என்று சிலர் அபிப்பிராயப் படலாம். ஆனால் அவர்கள் கொஞ்சம் கடலைப்புண்ணாக்கு, அமோணியமஸல்பேட்டு "சீமை உப்பு" உரங்களை கலந்து எருபோட்டால், வைக்கோல் ராசியையும் அதிகப்படுத்திக்கொள்ளலாம். சிக்கன நடுகைக்கு ஏற்ற தினுசு ஏக்கர் 1-க்கு 20-படி விதைக்குமேல் தேவையில்லை. சாப்பாட்டுக்கு நயமான அரிசியை கொடுக்கிறது காய்ச்சலையும், நோவையும் தாங்கக்கூடிய நெல்வகை.

சாதாரணமாக ஒரு ஆள் நடுகை நாத்தங்காலில், புழுதி முறையில் சம்பா நெல்லில் பக்கா 75-படி விதை தெளிக்கிறார்கள். செய்நேர்த்திமுறைகளை செம்மையாகச் செய்தால், 55-படி விதையை மீதம்பிடித்து சாப்பாட்டுக்கு வைத்துக்கொள்ளக்கூடாதா. அதிக வயதுள்ள சம்பா நெல் தினுசுகளிலும் பொருக்கு விதைகள் இருக்கின்றன. ஸர்க்கார் பண்ணையில் சிவப்பு & வெள்ளை சிறுமணியன், கிச்சலிச்சம்பா, கார்த்திகைசம்பா, விற்பனைக்கு சேகரம் செய்யப் பட்டிருக்கிறது. வெள்ளைக்கட்டை, முத்துச்சம்பா, பட்டணம்சம்பா, கெருடன் சம்பா, ராமன்சம்பா, தோட்டச்சம்பா, விதைநெல் தினுசுகளும் இருக்கின்றன. போன மாசூலில், நல்ல விதை கிடைக்காதவர்கள், கணக்குப்பிள்ளை சிபார்சின் பேரில், விதைநெல்லை கிரயத்திற்கு காலத்தில் பெற்று விதைப்பை தொடங்க வேணுமாய்க் கோரப்படுகிறது. அம்மோனிய கந்தகிகஜம் (ammonium sulphate) என்ற சீமை உரத்தை பயிர்களுக்கு உபயோகிக்கும் விஷயமாய் தனியாக விவரங்கள் பிரசுரிக்கப்படும்.

விவசாயிகளுக்கு "உரம்செய்வது ஊரார் செய்யார்" என்கிற பழமொழி அனுபவ பூர்வமாகவே தெரியும். இருந்தாலும் போதுமான அளவு கால்நடை உரம் சேகரிப்பதில், கவனம் செலுத்துவது இல்லை, மாட்டு மூத்திரத்துடன் சாணமும் சேகரிக்கப்பட்டு, மட்கினால்தான் அது நல்ல எருவாகும். சாணிமட்டும் பூர்ணமான எருவாகாது. ஊக்கப்படுத்தப்பட்ட கலவை குப்பை செய்யும் விதத்தைப்பற்றிய விவரங்கள் இனி பிரசுரிக்கப்படும். நெற்பயிருக்கு கால்நடை எருவுடன் தழை உரமும் அவசியமானது, காடுகளுக்கு சமீபத்தில் உள்ளவர்கள் போதுமான அளவு விழுலி, ஆவாரை, காயா, வெப்பாலை, கொண்ணைத் தழைகளை உபயோகிக்கிறார்கள். தூரத்தில் இருப்பவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கிப் போட தயங்குகிறார்கள். அதிலும் வாரத்துக்கு சாகுபடி செய்யப்படுகிற நஞ்சை நிலங்கள் உரத்தையே காண்பது அரிது. ஆகையால் வண்டித்தழை கிடைக்காதவர்கள் அமோனியம்ஸல்பேட் உரத்தையும் கடலைப்புண்ணாக்கையும், கலந்து உரம் செய்யும்பக்ஷத்தில் நெல்லில் ஜாஸ்தி மாசூலைப் பெறலாமென்பதில் சந்தேகமில்லை. உரம் தகுந்த அளவு இல்லாதபோனால் பயிர்கள் தெய்வீகமாய் ஏற்படக்கூடிய நோவு பூச்சிகளின் சேதத்தை எவ்வாறு தாங்கமுடியும். ஏராளமாய் கடலைப்புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நமக்கு போதுமான அளவை இவ்விடத்தில் உபயோகிக்க பிரயாசைப்படவேண்டும். மீதியைத்தான் விற்பனைக்கு கொடுக்க முயலவேண்டும். அமோனியம்ஸல்பேட் உரமும் ஸர்க்காரில் பெற்றுக்கொள்ளலாம். சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்களைப்

பெற்று சீர்திருத்தம் செய்து, முதலில், வரகு கேப்பை, குதிரைவாலி, பனிவரகு பயிர்களைச் சாகுபடி செய்து பிற்பாடு நெற்சாகுபடி செய்வது உஜிதமாகும். ஜலவசதிக் குறைவாயிருந்தால் கடலை, முந்திரி போன்ற வேளாண்மை செய்து பலன் அடையலாம். கிணறுகள் நல்லதாக அமைந்தபக்ஷத்தில், மா, பிலா, நார்த்தை, எலுமிச்சை, பப்ளிமாஸ், கிடாரைபோன்ற விருக்ஷங்களை உற்பத்தி செய்ய பிரயத்தனப்படவேண்டும்.

இந்த நோக்கத்துடன் விவசாயிகள் உழைத்தால், உணவு நெருக்கடியை தடுக்க நாமும் ஈடுபடுகிறோமென்று பெருமை அடையலாம்.

ஸமஸ்தான கால்நடை இலாகா.

(S. சின்னையா தக்கடி).

தலைநகரில் ஒரு கால்நடை ஆஸ்பத்திரியும், கிராமங்களில் சுற்றி கால்நடைகளுக்கு வேண்டிய உதவிபுரிவதற்கும், மூன்று தாலூகாக்களிலும் தனித்தனியே ஒரு கால்நடை வைத்தியரை நியமித்து இருக்கிறார்கள். கிராமங்களில் கொள்ளை நோய் ஏற்பட்ட காலத்தில் நேரே கால்நடை வைத்தியருக்கும், சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கும் தெரிவித்துக்கொண்டால், அவர்கள் பரவாமல் தடுப்பதற்கு அம்மைவைத்தும், மற்றபடி சிகிச்சையும் செய்வார்கள்.

தற்காலத்தில் பிளேக் என்று சொல்லப்படும் வியாதி அன்னவாசல், தச்சம்பட்டி, காரையூர், கீழத்தானியம் முதலிய கிராமங்களில் கண்டு கால்நடைகளுக்கு அம்மை வைக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய வியாதிக்கு கருங்கால், சப்பை நோய், சந்துஅடைப்பான், ஆமைஅடைப்பான் என்ற பல பெயர்களும் உள.

இந்த நோய் பச்சைப்பல்லுள்ளவும், நல்ல சதைப்பற்றுள்ளவுமான இனங்களைத்தான் அநேகமாய்த் தாக்கும்.

வியாதியின் குணம், குறிகள் :—

இளங்கன்று 2, 4, 6 பல்போட்டவைகளைப் பிடிக்கும். மேச்சத்துறையிலிருந்து வீடு திரும்புங்காலத்தில் உற்றுநோக்கிப் பார்த்தால் மாடு குன்னி, அசந்து கால்தாங்கி வரும். மறுநாள் காலையில் முன் சப்பை அல்லது பின் சப்பையில் ஆமை ஓடுபோல் வீக்கம் கண்டு, வரவர பெருத்துக்கொண்டும், விரலால் அழுத்திப்பார்த்தால் நொர நொர என்று சப்தம் கேட்கும். (Gas-Gangrene) சில சமயங்களில் வயறு உப்பும். சாயந்திரத்துக்குள் முடிந்துபோகும். இந்த நோய் நெடுநாளைக்குக் கிராமங்களில் நிற்காது. தூக்குத் தூக்காய்த்தோன்றி சீக்கிரத்தில் மறையும். சேதமானவைகளைப் பூமிக்குள் சுண்ணாம்பு நீருடன் கலந்து புதைத்தல், மேய்ச்சல் ஸ்தலத்தை மாற்றல், கட்டுத்துறைகளை அடிக்கடி சுண்ணாம்பு நீரால் தெளித்தல், இவைகளால் நோய் அணுகாது, பாதுகாக்கலாம், நிலங்களைத்தரிச போடாமல் உழுது, அடிக்கடி சாகுபடி செய்தால் வியாதி ஏற்படுவதற்கே ஹேதுவில்லை.

சாரணீயக் குறிப்புகள்.

(G. வெங்கடேசன், D. C. C. புதுக்கோட்டை சாரண சங்கக் காரியதரிசி).

உலக வியாபகமான சாரண சமூகத்தைப்பற்றி அறியாதார் இல்லை. சாரணீயத்தின் நோக்கம் சிறுவர்களுக்கு நல்ல பழக்கங்களின்மூலம் நல்லொழுக்கம் அமையுமாறும், தேசபக்தி, அரச விசுவாஸம், தன்னலமற்ற சமூகஸேவை போன்ற நல்லெண்ணங்கள் விருத்தியடையுமாறும் பயிற்சியளித்து உயர்ந்த தேச மக்களாக்குவதேயாகும். இந்திய சாரணச் சங்கத்தின் நோக்கமும் இதுவே.

'The Boy Scouts International Bureau' எனப்படும் சகலதேச சாரண சங்கத்துடன் இணைக்கப்பட்ட இந்திய சாரணச் சங்கத்தின் (Boy Scouts Association in India) கிளையாக புதுக்கோட்டை ஸமஸ்தான சாரணச் சங்கம் உள்ளது. மாட்சிமிக்க மன்னர்பிரான் அவர்கள் 'பிரதம சாரணர்' ஸ்தானம் வகித்து சங்கத்தின் தலைவராய் ஆதரவளிக்கிறார்கள். திவான் ஜனாப் கான் பஹதூர் கலிபுல்லா ஸாஹிப் அவர்கள் ஸமஸ்தான கமிஷனராகவும், ஸ்ரீ ராவ் ஸாஹிப் பரமசிவம் பிள்ளை அவர்கள் உதவி கமிஷனராகவும் பதவி வகிக்கின்றனர். தலைநகரிலும், வெளியூர்களிலுமாக சுமார் இருபத்தைந்து சாரணத் தொகுதிகளும் அவற்றில் இளஞ்சாரணர், சாரணர், திரிசாரணர், தலைவர்கள் மொத்தம் ஆயிரத்துக்கு அதிகமான அங்கத்தினர்களும் இதில் சேர்ந்தவர். தொகுதிகள் சில பாடசாலைகளைச் சேர்ந்தவை. மற்றவை எந்த ஸ்தாபன ஆதிக்கியமுமற்று தனித்து நின்று சேவைபுரிவன. திருமயம் தாலுகாவில் நகரத்தார் இளைஞர்களிடையே இத்தகைய தொகுதிகள் பணியாற்றிவருகின்றன.

ஆங்காங்கே உற்சவ முதலிய விசேஷ காலங்களில் சாரணர்கள் தங்களால் இயன்ற சமூகசேவை செய்கின்றனர். சில தொகுதிகள் கிராமங்களுக்குச் சென்று சுகாதாரம் முதலிய கிராமாபிவிருத்தி சம்பந்தமான பிரசாரங்கள் செய்கின்றன. தலைநகரிலுள்ள மத்திய சங்கக் காரியதரிசிக்கு எழுதியும் ஆங்காங்கே தொகுதிகளின் தலைவர்களை நேரில் கேட்டும் சாரணர்களுடைய சேவையைப் பொதுக் காரியங்களுக்குப் பெறலாம். இயன்றவரை பணி செய்வதே சாரணர் கொள்கை.

ஆடிமாதக் குறிப்புகள் :—

சம்மங்குடிப்பட்டி (ஸமனஸூர்) கத்தோலிக்க தேவாலயத் திருநாளில் ராமச்சந்திரபுரம் பூமீசுவரர் தனித்தொகுதி திரிசாரணர் தமது தலைவர் KM. N. குமரப்ப செட்டியார் தலைமையில் சிறந்த தொண்டாற்றினர். பங்கு சாமியாரும், பொது மக்களும் சேவையைப் பயன்படுத்திக்கொண்டு பெரிதும் பாராட்டினர்.

ஆடி 13, 14, 15 தேதிகளில் பூமீசுவர திரிசாரணர் பனங்குடி வட்டத்தைச் சார்ந்த ஆணைவாரி கிராமத்தில் முகாம் தங்கினர். உபயோகமான பாடி வாழ்க்கை சாரணீயப் பயிற்சிகளுக்கு நிறைய அவகாசம், கிராம அபிவிருத்திப் பிரசாரமும் நடந்தது. முகாமுக்குத் தலைவர் திருமெய்யம் டிஸ்ட்ரிக்ட் ரோவர் லீடர் குமரப்ப செட்டியார். சாரண சங்கக் காரியதரிசியும் உடனிருந்து பயிற்சிகளுக்கு உதவினர்.

‘துரோண ரோவர்ஸ்’ தலைவர் ஸத்தியமூர்த்தி ராவ் ரா-தர்பார் அவர்கள் பணித்தபடி ஸமஸ்தானத்தின் பல பாகங்களிலும் சுற்றி சந்தைகள்தோறும், உற்சவ முதலிய ஜனங்கள் கூடும் விசேஷங்களிலும், கோதுமை, சோளம் முதலிய தானியங்களை இந்த ரேஷன் காலத்தில் எவ்வாறு உபயோகிக்கலாம் என்பதை நிதர்சனம் செய்து, பலகாரவகைகளைச் செய்துகாட்டி பிரசாரம் நீடித்து செய்துவந்திருக்கிறார். உதவி ரோவர் லீடர் பஞ்சாபகேசன் உணவுப் பிரசார சம்பந்தமாயும், கறிகாய் அதிக உணவுப்பொருள் விளைவுபற்றியும் பிரவசனங்கள் வெளியிட்டு உதவியுள்ளார். இதே குழுவைச் சேர்ந்த ரோவர் ராமு ‘சிறிய சேமிப்புத்திட்டம்’ பிரசாரத்தில் ஈடுபட்டு இதுவரை ஐம்பதினாயிரம் ரூபாய் பத்திரங்கள் விற்று பொதுஜன சிக்கனத்திற்கு உதவியிருப்பது பாராட்டுக் குறியது.

திருமயம் தாலூகாவில் டிஸ்டிரிக்ட் ரோவர் லீடராகத் தொண்டு ஆற்றிய ராமகோவிந்தன் செட்டியார் அவர்களுக்கு அவர் சாரணீயத்திற்குச் செய்த சேவையைப் பாராட்டி மேன்மை தங்கிய இந்தியா பிரதம சாரணர் (வைஸ்ராய்) Medal of merit என்னும் யோக்யதைப் பதக்கத்தை அளித்துள்ளார்கள்.

சுதந்திர தின வாழ்த்து.

(A. ராமஸ்வாமி அய்யர், மாலியின் கிராமத் தொழில் சங்கம், புதுக்கோட்டை)

(கும்மி மெட்டு)

(1) கேளுங்கடி பெண்கள் கேளுங்கடி—யிப்போ
கவனமாய்ச் சொல்வதைக் கேளுங்கடி
கேட்டபின்னானந்தம் பெற்றிடுவீர்—அதைக்
கேட்டிலாமக்கட்குரைத்திடுவீர்

(2) சொல்வது யாதெனச் சந்தேகங்—கொண்டே
சலியாதீர்ச் சற்று மெலியாதீர்
செம்மை பொருந்திய சமஸ்தான—மன்னவர்
சீர்பெறச் செய்த சீர்திருத்தமதே கேளுங்கடி

(3) மன்னவர் சின்னவரானாலும்—மகா
கெண்ணியமான எண்ணங்கொண்டு
பாரத நாட்டின் விடுதலையைப் பெரும்
நற்றவமென்றே நினைக்கலானார் கேளுங்கடி

(4) நற்றவமென்று கருதியதும்—அதில்
சற்றுந்தயங்காமல் சேர்ந்தனரே
மற்றுஞ்சில மன்னர் மயங்கின—கொள்கையால்
தட்டுத்தடுமாறி நிற்கையிலே கேளுங்கடி

(5) மக்களின் வாழ்வு மங்கிடாமல்—ஓங்க
அமைச்சரிருவரை யமைத்தனரே
மிக்கதோரறிவும் மாருன் பெற்றிட
தக்கதோர் கட்டாயக்கல்வி யீந்தார் கேளுங்கடி

(6) இத்தகை யுத்தமக் கொள்கையைக்—கொண்டுள
மன்னவர் ராஜகோபாலருக்கு
மெத்தவும் சந்தானச் செல்வம்—ஓங்கிட
நித்தமும் நாதனைப் போற்றுவோமே.

கொடிப்பாட்டு.

(கனகம்).

பல்லவி.

நாட்டின் பெருங்கொடி யீதே—இதை (நா)
நண்ணிப்பணிந்து தொழுவமிப்போதே

அனுபல்லவி.

வீட்டிலு மூரிலுமெங்கும் நல (நா)
மேன்மைச் சுதந்திர வெள்ளமே பொங்கும்

சரணம்.

உறுதியாய் நிமிர்ந்துள தூணம்—அதன்
உச்சியில் வானத்தை யொட்டவே காணும்
பெறுதி யுரிமையை யென்றே—முன்பு
பேசிய கொடியினைப் பேணுவம் நின்றே (நா)

இந்திய நாடென்பதான்றே—அங்கு
இருப்பவர் யாவரும் இனத்தவர் என்றே
மந்திர சுதந்திரம் நன்றே—இனி
வாய்த்திடக்கொடியினை வணங்குவோம் நின்றே (நா)

வேற்றுமை பல பல வேனும்—அவை
மேன்மைக் கொடியின் முன் விலகுவதானும்
ஆற்றல் வளருவதாலும்—நந்தம்
அன்னை கொடியினையடைவ முக்காலும். (நா)

ஓர் எச்சரிக்கை.

Lakh Dhall என்ற பெயர் கொண்ட ஓர் பருப்பு வகை இந்த வட்டாரங்களில் இறக்குமதி யாவதாகத் தெரிகிறது. அதற்குப் பட்டுப்பருப்பு என்று சொல்லுவதுண்டு. இது தேகத்திற்கு வியாதியை உண்டு பண்ணக்கூடிய ஓர் உணவுப் பொருளாம். இதை ஓர் அளவுக்குமேல் உபயோகப்படுத்தினால் பாரிச வாயுவைப் போன்ற ஓர் நோய் ஏற்படுகிறதென்று சொல்லப்படுகிறது.

ஆகையால் இந்தப் பட்டுப்பருப்பை யாரும் உபயோகிப்பது சாவதானமில்லை யென்றும் நமது சமஸ்தானத்தில் மக்கள் இதை உபயோகிக்கவேண்டாமென்றும் இதனால் எச்சரிக்கப்படுகிறது.

இம்மாதிரி உணவுப் பொருள்களை விற்பது சட்டப்படிக்குக் குற்றமாகக் கூடியது. பட்டுப்பருப்பை இறக்குமதி செய்து விற்கவாவது சேமித்து வைக்கவாவது செய்தால் அது சட்டப்படி குற்றமாகக்கூடியதாகையால் வியாபாரிகள் இந்த உணவுப் பொருள்களை சேமித்துவைக்கவாவது விற்கவாவது வேண்டாமென்று இதனால் தெரியப்படுத்தப்படுகிறது.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,000—14-8-47.

Published by the Publicity Officer, Pudukkottai State. Printed at the Sri Brihadamba State Press, Pudukkottai. All communications should be addressed to the Publicity Officer, Pudukkottai.